**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்.123/2025**

(TNTM03000276/2025)

எஸ்.வி.குமார் ... வாதி

... எதிர் ...

1. கனகராணி
2. வெங்கடேசன்
3. சுகுணா
4. தேன்மொழி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 24.02.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது வாதித் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மனோகரன்,M.B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கின் அழைப்பாணையை பெற்றுக்கொண்டு, இந்நீதிமன்றத்தில் அழைத்தும் வருகையின்மையால் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக 12.09.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

13.02.2020ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தப்படி வாதியிடமிருந்து 1 முதல் 4 பிரதிவாதிகள் மீதி கிரைய தொகையான ரூ.25,000/–த்தை பெற்றுக்கொண்டு, வழக்கு சொத்தை வாதி பெயருக்கு பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்து சுவாதீனம் கொடுக்கும்படிக்கும், மாற்று பரிகாரமாக, 1 முதல் 4 பிரதிவாதிகள், வாதிக்கு கிரைய முன்பணம் ரூ.1,00,000/–க்கு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட 13.02.2020 முதல் மாதம் 1–க்கு 12% வட்டியுடன் வாதிக்கு, 1 முதல் 4 பிரதிவாதிகள் திரும்ப கொடுக்க உத்தரவிடுமாறும் மற்றும் செலவுத்தொகையை வாதிக்கு, 1 முதல் 4 பிரதிவாதிகள் செலுத்துமாறு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**1. வழக்குரையின் சுருக்கம்:–**

தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தையான திரு.கோவிந்தசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும்.

மேற்படி கோவிந்தசாமி என்பவர் 1 முதல் 4 பிரதிவாதிகளை அவரின் சட்டபூர்வமான வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் என்ற முறையில் பிரதிவாதிகள் மீது மேற்படி தாவா ஆனது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திரு.கோவிந்தசாமி வழக்கு சொத்தை விற்பனை செய்ய ஒப்புக்கொண்டு, வழக்கு சொத்துக்கு ரூ.1,25,000/–ம் என விலை நிர்ணயம் செய்து வாதியிடமிருந்து மேற்படி கோவிந்தசாமி 13.02.2020ம் தேதியில் கிரைய ஒப்பந்தத்தின் முன்பணமாக ரூ.1,00,000/–ம் பெற்றுக்கொண்டு மீதி கிரையத் தொகை ரூ.25,000/–ம் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியிலிருந்து மூன்று வருட கால கெடுவுக்குள் வாதி, கோவிந்தசாமியிடம் செலுத்தி வாதி பெயருக்கு பத்திரம் எழுதி பதிவு செய்து கொள்ள வேண்டியது என்றும், மேற்படி கால கெடுவிற்குள் வாதி தயாராக இருந்தும் கோவிந்தசாமி பத்திரம் பதிவு செய்துக்கொள்ள வரமறுத்ததால், வாதி மீதி கிரைய தொகையான ரூ.25,000/–த்தை சட்டப்படி நீதிமன்றத்தில் செலுத்தி வாதியின் பெயருக்கு பதிவு செய்து கொள்ள வேண்டியது என வாதி, கோவிந்தசாமி இருவரும் முடிவு செய்து அதன் படி ஒரு விற்கிரைய ஒப்பந்த பத்திரம் 13.02.2020 அன்று தயார் செய்யப்பட்டது. மேற்படி கிரைய ஒப்பந்தம் ஆனது ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.991/2020 என்ற எண்ணாக 13.02.2020 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி 13.02.2020 தேதியிட்ட கிரைய ஒப்பந்தப்படி வாதியானவர் மீதி கிரையத் தொகை ரூ.25,000/–த்தை பெற்றுக்கொண்டு வழக்குச் சொத்தை தன் பெயருக்கு ஒரு விற்பனை ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுக்கும்படி பலமுறை கேட்ட போது மேற்படி காலம்சென்ற கோவிந்தசாமி விற்கிரைய அக்ரிமெண்ட்டில் கண்ட ஷரத்து படி எழுதி கொடுக்காமல் வீண் காலம் தாழ்த்தி வந்தார். காலம்சென்ற கோவிந்தசாமி என்பவர் இறந்த பின்னர் அவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளிடம், வாதி மீதி கிரையத் தொகை ரூ.25,000/–த்தை பெற்றுக்கொண்டு வழக்குச் சொத்தை தன் பெயருக்கு ஒரு விற்பனை ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுக்கும்படி பலமுறை கேட்டபோது மேற்படி 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் விக்கிரைய அக்ரிமெண்ட்டில் கண்ட ஷரத்து படி எழுதி கொடுக்காமல் வீண் காலம் தாழ்த்தி வந்தார்கள்.

3. மேற்படி, விற்பனை கிரைய ஒப்பந்த ஷரத்து படி மீதி கிரைய தொகை ரூ.25,000/–த்தை பெற்றுக்கொண்டு தாவா சொத்தினை பதிவு செய்து தரும்படி ஒரு சட்ட அறிவிப்பினை வாதி, 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு கடந்த 15.11.2024ல் அனுப்பினார். மேற்படி சட்ட அறிவிப்பினை 1 முதல் 4 பிரதிவாதிகள் 18.11.2024 அன்று பெற்றுக்கொண்டார்கள். மேலும் வாதி 13.02.2020 தேதியிட்ட கிரைய ஒப்பந்தப்படி மீதி கிரைய தொகையான ரூ.25,000/–ம் எப்போதும் தயார்

நிலையில் வைத்துக்கொண்டு பத்திரம் எழுதி பதிவு செய்து கொள்ள தயாராக உள்ளார். மேலும், வாதி மீதி கிரைய தொகையாக ரூ.25,000/−ம் கனம் நீதிமன்றத்தார் அவர்கள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய கூறும் பட்சத்தில் அதனை கனம் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவும் தயாராகவும் உள்ளார். இதற்காக வாதி தனியாக மனு தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு, காலம்சென்ற கோவிந்தசாமி 13.02.2020ல் எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தத்தை மறைத்து வழக்குச் சொத்தினை சட்டத்திற்கு புறம்பாக வேறு நபருக்கு விற்பதற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் சுமார் 1 மாத காலமாக முயற்சி செய்து வருவதாக வாதிக்கு தெரியவருகிறது. அவ்வாறு 1 முதல் 4 பிரதிவாதிகள் வேறு நபர்களுக்கு விற்பனை செய்துவிட்டால், பின்னர் வாதி வழக்கு சொத்தை கிரைய ஒப்பந்தப்படி அடைவதில் பிரச்சனைகள் ஏற்படும். எனவே, பிரதிவாதியின் செயலை சட்டப்படி தடுக்க வேண்டியது அவசியம் இல்லாவிட்டால், வாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்று இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

4. 1 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கின் அழைப்பாணையை பெற்றுக்கொண்டு, இந்நீதிமன்றத்தில் அழைத்தும் வருகையின்மையால் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக 12.09.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

5. இவ்வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதிகள் என்னவென்றால்,

1. வாதி கிரைய ஒப்பந்தப்படி ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்ள தயாராகவும், விருப்பமாகவும் இருந்து வந்துள்ளாரா?

2. வழக்கில் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கதா?

3. வழக்கில் கோரியுள்ள மாற்று பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கதா?

4. வேறு என்ன பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கது?

6. வாதி தரப்பில், வாதி வா.சா.1 திரு.எஸ்.வி.குமார் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். 13.02.2020 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.1, 15.11.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.2, 1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3, 2ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4, 3ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.5, 4ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.6, வாதியின் ஆதார் அட்டை நகல் (அசல்

ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது) வா.சா.ஆ.7 என ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7. பிரச்சனை எண்.1 மற்றும் 2 :–**

1. வாதி கிரைய ஒப்பந்தப்படி ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்ள தயாராகவும், விருப்பமாகவும் இருந்து வந்துள்ளாரா?

2. வழக்கில் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கதா?

தாவா வழக்குரையில், தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தையான திரு.கோவிந்தசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். மேற்படி கோவிந்தசாமி என்பவர் 1 முதல் 4 பிரதிவாதிகளை அவரின் சட்டபூர்வமான வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் என்ற முறையில் பிரதிவாதிகள் மீது மேற்படி தாவா ஆனது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திரு.கோவிந்தசாமி வழக்கு சொத்தை விற்பனை செய்ய ஒப்புக்கொண்டு, வழக்கு சொத்துக்கு ரூ.1,25,000/–ம் என விலை நிர்ணயம் செய்து வாதியிடமிருந்து 13.02.2020ம் தேதியில் கிரைய ஒப்பந்தத்தின் முன்பணமாக ரூ.1,00,000/–ம் பெற்றுக்கொண்டு மீதி கிரையத் தொகை ரூ.25,000/–ம் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியிலிருந்து மூன்று வருட கால கெடுவுக்குள் வாதி, கோவிந்தசாமியிடம் செலுத்தி, வாதி பெயருக்கு பத்திரம் எழுதி பதிவு செய்து கொள்ள வேண்டியது என்றும், மேற்படி கால கெடுவிற்குள் வாதி தயாராக இருந்தும் கோவிந்தசாமி பத்திரம் பதிவு செய்துக்கொள்ள வரமறுத்ததால், வாதி மீதி கிரைய தொகையான ரூ.25,000/–த்தை சட்டப்படி நீதிமன்றத்தில் செலுத்தி வாதியின் பெயருக்கு பதிவு செய்து கொள்ள வேண்டியது என வாதி மற்றும் கோவிந்தசாமி இருவரும் முடிவு செய்து அதன் படி ஒரு விற்கிரைய ஒப்பந்த பத்திரம் 13.02.2020 அன்று தயார் செய்யப்பட்டது. மேற்படி கிரைய ஒப்பந்தம் ஆனது ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.991/2020 என்ற எண்ணாக 13.02.2020 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

8. மேற்படி 13.02.2020 தேதியிட்ட கிரைய ஒப்பந்தப்படி வாதியானவர் மீதி கிரையத் தொகை ரூ.25,000/–த்தை பெற்றுக்கொண்டு வழக்குச் சொத்தை தன் பெயருக்கு ஒரு விற்பனை ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுக்கும்படி பலமுறை கேட்ட போது மேற்படி காலம்சென்ற கோவிந்தசாமி விற்கிரைய அக்ரிமெண்ட்டில் கண்ட ஷரத்து படி எழுதி கொடுக்காமல் வீண் காலம் தாழ்த்தி வந்தார். காலம்சென்ற கோவிந்தசாமி என்பவர் இறந்த பின்னர் அவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளிடம், வாதி மீதி கிரையத் தொகை ரூ.25,000/–த்தை பெற்றுக்கொண்டு வழக்குச் சொத்தை தன் பெயருக்கு ஒரு விற்பனை

ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுக்கும்படி பலமுறை கேட்டபோது மேற்படி 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் விக்கிரைய அக்ரிமெண்ட்டில் கண்ட ஷரத்து படி எழுதி கொடுக்காமல் வீண் காலம் தாழ்த்தி வந்தார்கள்.

9. மேற்படி, விற்பனை கிரைய ஒப்பந்த ஷரத்து படி மீதி கிரைய தொகை ரூ.25,000/−த்தை பெற்றுக்கொண்டு தாவா சொத்தினை பதிவு செய்து தரும்படி ஒரு சட்ட அறிவிப்பினை வாதி, 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு கடந்த 15.11.2024ல் அனுப்பினார். மேற்படி சட்ட அறிவிப்பினை 1 முதல் 4 பிரதிவாதிகள் 18.11.2024 அன்று பெற்றுக்கொண்டார்கள். மேலும் வாதி 13.02.2020 தேதியிட்ட கிரைய ஒப்பந்தப்படி மீதி கிரைய தொகையான ரூ.25,000/−ம் எப்போதும் தயார் நிலையில் வைத்துக்கொண்டு பத்திரம் எழுதி பதிவு செய்து கொள்ள தயாராக உள்ளார். மேலும், வாதி மீதி கிரைய தொகையாக ரூ.25,000/−ம் கனம் நீதிமன்றத்தார் அவர்கள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய கூறும் பட்சத்தில் அதனை கனம் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவும் தயாராகவும் உள்ளார். ஆனால் 1 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுக்க முன்வராததால், ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும், மாற்றுப் பரிகாரமாக ஒப்பந்த முன்தொகை ரூ.1,00,000/−க்கு 12% வட்டி மற்றும் பின்வட்டியுடன் திருப்பி செலுத்தக் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வாதி தரப்பில் வழக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

10. வாதியும், இறந்துபோன கோவிந்தசாமியும் 13.02.2020ஆம் தேதி தாவா சொத்தை பொறுத்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள் என்பதை வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் மூலம் அறிய முடிகிறது. தாவா சொத்திற்கான கிரைய மறுபயன் ரூ.1,25,000/−ம் ஆகும். கிரைய ஒப்பந்த தேதியில் வாதி, இறந்துபோன கோவிந்தசாமியிடம் ஒப்பந்த முன்தொகையாக ரூ.1,00,000/−ம் செலுத்தியுள்ளார் என்பதை வா.சா.ஆ1ன் மூலம் அறிய முடிகிறது. மீதி கிரையத்தொகையான ரூ.25,000/−த்தை 3 வருட காலத்திற்குள் வாதி, இறந்த கோவிந்தசாமியிடம் செலுத்தி கிரையம் செய்துக்கொள்ள வேண்டும் என்பது நிபந்தனையாகும். வாதி கிரைய ஒப்பந்தபடி கிரையம் செய்துக்கொள்ள விருப்பமாகவும், தயாராகவும் இருந்தார் என்றும், கோவிந்தசாமி கிரைய ஒப்பந்தப்படி மீதி கிரையத்தொகையை பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றும் வழக்குரையில் விபரம் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், கோவிந்தசாமி இறந்துவிட்டார். கோவிந்தசாமியின் வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு, வாதி வழக்கறிஞர் மூலம் 15.11.2024ம் தேதியிட்ட வா.சா.ஆ.2 அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பு 1 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. கிரைய ஒப்பந்தப்படி 3 வருட காலக்கெடுவுக்குள் மீதி கிரைய தொகையான ரூ.25,000/−த்தை வாதி, இறந்த கோவிந்தசாமியிடமோ அல்லது 1 முதல் 4 பிரதிவாதிகளிடமோ கொடுத்து கிரையம் செய்து கொள்ள தயாராகவும், விருப்பமாகவும் இருந்தார் என்பதை வாதி நிரூபணம் செய்ய வேண்டியது அவசியமாகும். வாதி தனது வழக்குரையில் கிரைய ஒப்பந்தப்படி மீதியுள்ள கிரைய தொகையை செலுத்தி கிரையம் செய்து கொள்ள விருப்பமாகவும், தயாராகவும் இருந்ததாக விவரம் கூறியிருக்கிறார். ஆனால், வாதி மீதி கிரைய தொகையை இறந்த கோவிந்தசாமியிடமோ அல்லது 1 முதல் 4 பிரதிவாதிகளிடமோ செலுத்தி கிரையம் செய்து கொள்ள தயாராகவும், விருப்பமாகவும் இருந்தார் என்பதை நிரூபணம் செய்யக்கூடிய ஆவணம் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. கிரைய மீதி தொகையை வாதி தயாராக வைத்திருந்தார் என்பதற்கு தகுந்த ஆவணம் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

12. 2016 (4) CTC 152, M.Johnson Vs. E.Pushpavalli, என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கிரய ஒப்பந்த ஆவணத்தில் கிரையம் செய்து கொள்வதற்கான கால அளவு குறிப்பிட்டு இருந்தால் அந்த கால அளவு முடிவதற்குள் கிரையம் செய்து முடிக்க வேண்டும். அந்தக் காலம் முடிவடைந்த பின்னர் காலதாமத்துக்கான காரணம் குறித்து வாதி விளக்கம் அளிக்க வேண்டும். அவ்வாறு விளக்கம் அளித்த தவறினால் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியது அல்ல என்று தீர்வு காணப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் முன் தீர்ப்பு இந்த வழக்கிற்கு பொருந்தும் விதமாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனென்றால் இந்த வழக்கில் வாதியும், கோவிந்தசாமியும் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட தேதி 13.02.2020 ஆகும் கிரைய ஒப்பந்தத்தில் 3 வருட காலத்திற்குள் மீதி கிரைய தொகை ரூ.25,000/−த்தை கொடுத்து வாதி, இறந்த கோவிந்தசாமியிடம் கிரையம் செய்து கொள்வதாக நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 12.02.2023 தேதிக்குள் வாதி கிரைய ஒப்பந்தப்படி இறந்த கோவிந்தசாமியிடமோ அல்லது 1 முதல் 4 பிரதிவாதிகளிடமோ மீதி கிரைய தொகையை செலுத்தி கிரையம் செய்து கொண்டிருக்க வேண்டும். ஆனால், இந்த வழக்கில் அவ்வாறு நடைபெறவில்லை. கிரையம் செய்து கொடுக்க வேண்டி வாதி தரப்பில் 15.11.2024ஆம் தேதி தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதாவது கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனை காலமான 3 வருட காலம் முடிந்த பிறகு சுமார் 20மாதங்கள் கழித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி தீர்ப்புரையின் அடிப்படையில் பார்க்கும்போது 20 மாத கால தாமதத்திற்கு வாதி தரப்பில் தகுந்த விளக்கம் எதுவும் இந்த வழக்குரையில் விவரம் கூறவில்லை என்பதால் வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம்

மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில் கிடைக்கக்கூடியது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13. எனவே, வாதி கிரைய ஒப்பந்தப்படி கிரையம் செய்து கொள்ள விருப்பமுடனும் தயார் நிலையிலும் இல்லை என்றும், வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்க கூடியது அல்ல என்றும் இந்நீதிமன்றம் இந்த பிரச்சனை எண்கள். 1 மற்றும் 2ற்க்கு தீர்வு காண்கிறது.

**<u>14. பிரச்சனை எண்.3 :–</u>**

3. வழக்கில் கோரியுள்ள மாற்று பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கதா?

இவ்வழக்கிற்கான அழைப்பாணையை 1 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் வருகையின்மையால் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக 12.09.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1 முதல் 4 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்கு எதுவும் முன்வைக்கவில்லை. எனவே வாதியின் வழக்கை 1 முதல் 4 பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டதாக இந்நீதிமன்றம் அனுமானம் செய்கிறது. வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் பிரச்சனை எண்கள் 1 மற்றும் 2ற்க்கு முடிவு செய்துள்ளது. எனவே வாதிக்கு மாற்று பரிகாரம் கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வாதி கிரைய ஒப்பந்தம் ஏற்படும்போது கிரைய முன்பணமாக ரூ.1,00,000/–த்தை கோவிந்தசாமிக்கு கொடுத்துள்ளார் என்பது வா.சா.ஆ.1ன் மூலம் தெரியவருகிறது. மேற்படி கிரைய முன்பணம் 12% வட்டியுடன் வாதிக்கு, 1 முதல் 4 பிரதிவாதிகள் கிரைய ஒப்பந்த தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்த தேதிவரை செலுத்தவேண்டும் என்று இந்த பிரச்சனை எண்.3ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>15. பிரச்சனை எண்.4 :–</u>**

4. வேறு என்ன பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கது?

கிரைய ஒப்பந்தப்படி 1 முதல் 4 பிரதிவாதிகள், வாதிக்கு கிரையம் செய்து கொடுக்காததால் வாதிக்கு இந்த வழக்கை தாக்கல் செய்யும் அவசியத்தை 1 முதல் 4 பிரதிவாதிகள் ஏற்படுத்தி உள்ளார்கள். எனவே வழக்கு செலவு தொகையை வாதிக்கு, 1 முதல் 4 பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்று இந்த பிரச்சனை எண்.4ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றும், வாதிக்கு மாற்று பரிகாரமான கிரைய முன்பணம் ரூ.1.00,000/–மும் அதற்கு கிரைய ஒப்பந்த தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்த தேதிவரை 12% வட்டியுடன் மொத்தம் ரூ.1,65,326/–ம் முன்பணம் ரூ.1,00,000/–த்திற்கு, வழக்கு தாக்கலான

தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரையில் 6% சதவீதம் வட்டியுடன் வழக்கு செலவுத்தொகையை வாதிக்கு, 1 முதல் 4 பிரதிவாதி செலுத்தவேண்டும் என்றும், வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளித்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.03.30 17:42:01 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>வாதித் தரப்பு சாட்சிகள்:–</u>

வா.சா.1 திரு.எஸ்.வி.குமார்,(வாதி).

<u>வாதித் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.02.2020 | தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் அசல். |
| வா.சா.ஆ.2 | 15.11.2024 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல். |
| வா.சா.ஆ.3 | – | 1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.4 | – | 2ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.5 | – | 3ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.6 | – | 4ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.7 | – | வாதியின் ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது). |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–</u> ஏதுமில்லை.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.03.30 17:42:08 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.